# முசலிப் பிரதேச மக்களின்
# பன்மைத்துவ சமூக அமைப்பும் சக வாழ்வும்

எம்.ஏ. ஹபீழ் M.A. (Public Administration)

வடமாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில், 480 சதுர கிலோமீட்டர் பரப்பைக் கொண்ட முசலிப் பிரதேசம், இலங்கையின் வடமேற்கில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் புவியியல் ரீதியாக பல சிறப்புத் தன்மைகளையும் வனப்பையும் கொண்டமைந்துள்ளது. இதில் முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களின் பண்புக் கூறுகள் காணப்படுகின்றன.

தொன்மையான இலங்கை வரலாற்றின், தவிர்க்க முடியாத பிரதான வணிகச் செயற்பாட்டு மையங்களில் முசலிப் பிரதேசமும் ஒன்றாகும். தொன்மைக் குடியேற்றம் பற்றிய பழமையான குறிப்புகளிலும், பதிவுகளிலும் முசலியின் பெயரும் அதன் அமைவிடமும் இப்பிரதேச மக்களின் சிறப்புப் பண்புக் கூறுகளும் ஆய்வாளர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. அது ஒரு நிருவாகப் பிரதேசம் என்ற வகையில் அதன் வரலாற்றுத் தொன்மை ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டுச் செல்கிறது. வரலாற்று ஆவணப் பதிவுகளையும் தனித்துவமான வளத்தையும் பல்லின சமூகக் கட்டமைப்பையும் பன்மைத்துவ சகவாழ்வியல் தன்மையையும் கொண்ட ஒரு பிரதேசமாக அது காணப்படுகிறது.

இப்பிரதேசத்தின் வடக்கு எல்லையாக அருவி ஆறும் (மல்வத்து ஓயா), தெற்கு எல்லையாக மோதரகம ஆறும் அமைந்துள்ளன. இப்பிரதேசத்திற்கு அழகு சேர்க்கும் அடர்ந்த வில்பத்துக் காடு இதன் கிழக்குப் பகுதி எல்லையாக உள்ளது. மேற்கே இந்து சமுத்திரம் காணப்படுகிறது.

இலங்கையின் வட மாகாணத்தில், தொன்மை வரலாற்று மையங்களில் ஒன்றாக, ஆவண ரீதியான பதிவுகளைக் கொண்ட முசலிப் பிரதேசம், புத்தளம் மாவட்டத்தின் கலாசாரத்துடனும் பண்பாட்டுடனும் வட்டார மொழி வழக்குடனும் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளது. அதேபோன்று, முசலி பிரதேசத்தில் இருந்து புத்தளம் நோக்கிய நகர்வுகளும் பயணங்களும் உறவுகளும் தொடர்ச்சியாக நடைபெற்றிருக்கிறதைப் பார்க்க முடிகிறது. பூக்குளம், இலவங்குளம், வணாத்தவில்லு, கரைத்தீவு, புத்தளம் என்று முசலிப் பிரதேச மக்களின் தொடர்பு நீட்சி பெற்றிருந்தது. பல நூறு வருடங்களுக்கு முன்னரிலிருந்து ஒரு போக்குவரத்து முறை இரு பிரதேசங்களுக்கிடையே காணப்பட்டிருக்கிறது.

முசலியின் வரலாறு மிகவும் தொன்மையானது. இலங்கையின் மிக ஆதி நாகரிகம் முசலி - மாந்தை - அனுராதபுரம் ஆகிய மூன்று பிரதேசங்களையும் இணைக்கும் முக்கோணப் பிரதேசத்தில் காணப்பட்டது என வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். (Hocart - 1924) விஜயனின் இலங்கை வருகையும் முசலிப் பிரதேசத்தோடு சேர்த்துப் பார்க்கப்படுகிறது என (Seneviratne - 1979) குறிப்பிடுகிறார். அத்தகைய சிறப்புமிக்க துறைகளையும் கரையோரத்தையும் கொண்ட பிரதேசங்களில் ஒன்றாக இப்பிரதேசம் விளங்குகிறது.

அது, ஆதி காலத்திலிருந்து ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் வரை வர்த்தகத்திற்கும் விவசாயத்திற்கும் மற்றும் அரசியல் நிர்வாகத்திற்கும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. முசலியின் பெயர், வரலாறு என்பன சுவாரஸ்யமானதாகவும் பல நூற்றாண்டுகள் புராதன அதன் வரலாற்றை உறுதிப்படுத்தக் கூடியதாகவும் இருப்பது மற்றொரு சிறப்பம்சமாகும்.

முசலிப் பிரதேசம் வரலாற்றிற்கும் வர்த்தகத்திற்கும் விவசாயத்திற்கும் பெயர் பெற்றிருந்ததோடு, அதன் கிராமங்கள், பிரதேசத்தின் செல்வமாகவும் உயிர் நாடியாகவும் விளங்குகின்றன. ஒன்றோடொன்று தழுவியதாக, குறைந்த இடைவெளிகளுடன் அடுக்கடுக்காக தொடரும் வயல் வெளிகளுக்கிடையிலான, பல்லினத் தன்மையுள்ள மக்களின் சகவாழ்வு நிறைந்த கிராமங்களின் வரிசைதான் முசலிப் பிரதேசத்தின் செல்வமாகத் திகழ்கிறது.

வில்பத்துக் காடும் அதன் வன விலங்குகளும், வரட்சியும், தண்ணீர் தட்டுப்பாடும், உவர் நிலமும் கொண்ட இப்பிரதேசத்தின் வாழக் கடினமான, இயற்கைச் சூழலுடன் எமது முன்னோர்கள் நடத்திய வாழ்வியல் போராட்டங்களினால் இவை கிராமங்களாகவும்

வளமிக்க வாழிடங்களாகவும் வயல் வெளிகளாகவும் விவசாய நிலங்களாகவும் அவற்றிற்கான நீர்ப்பாசனக் குளங்களாகவும் மாறியுள்ளன.

எந்தவித அடிப்படைவ சதிகளுமற்ற ஒரு காலகட்டத்தில் இப்பிரதேசத்தில் குடியேறி, கொடூர வன விலங்குகளுடனும் காட்டுக் காய்ச்சல்களுடனும் கொடிய தொற்று நோய்களுடனும் வரட்சியுடனும் போராடி, இறந்து, பிறந்து அதில் தரித்து நின்ற நமது முன்னோர்கள் உண்மையான மாவீரர்கள்தான். இங்குள்ள ஒவ்வொரு கிராமத்தின் வரலாறும் இவ்வுரிமைப் பேரத்திலிருந்துதான் ஆரம்பமாகிறது. இப்பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனியான வரலாறுகள் உள்ளன.

இப்பிரதேசம் சிங்கள - தமிழ் மன்னர்களால் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்பட்டு வந்துள்ளது. இப்பிரதேச விவசாய பொருளாதாரத்தின் இதய நாடியான அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் திட்டமும் வியாயடித் திட்டமும் காணப்படுகின்றன என்பதை வரலாற்று நூல்களினூடாக அறிந்து கொள்ள முடிகிறது.

முசலியின் வரலாற்றுச் சிறப்புகளில் முதன்மையானது, இப்பிரதேச முத்துக் குளிப்பாகும். இப்பிரதேச முத்துக்குளிப்பு ஏறக்குறைய 2000 தொடக்கம் 3000 ஆண்டுகள் பழமையானது என்றும், இது உலகின் மிகப் பழமையான கைத்தொழில் நடவடிக்கையாக காணப்பட்டது என்றும் பழைய வரலாற்று அறிஞரான வேன் (1888) என்பவர் கூறுகின்றார்.

முசலி என்ற பெயரை இப்பிரதேசம் எவ்வாறு பெற்றுக் கொண்டது என்பதற்கு தெளிவான சான்றுகள் வரலாற்று நூல்களில் குறிப்பிடப்படவில்லை. எனினும், பிரித்தானிய காலனித்துவக் காலத்திற்கு முன்பிருந்தே இப்பிரதேசம் முசலி என்று அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. இங்கு முஸ்லிம்கள் பெருமளவு வாழ்ந்து வருவதால், இப்பெயர் வந்திருக்கலாம் என்று கருத முடிகிறது.

உலகில் முத்து சேகரிக்கப்பட்ட மிகப் பிரபல்யமான இடங்களில் ஒன்றாகவும் சங்கு, அம்பர் போன்ற அரிய கடற்திரவியங்கள் பெறப்படும் கடல் வலயம் காணப்படும் இடமாகவும் முசலிப் பிரதேசம் இருந்து வந்திருக்கிறது என்பதற்கான சான்றுகள் உள்ளன.

அல்லி ராணிகி கோட்டை இப்பிரதேசத்திலேயே உள்ளது. இன்று அது சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. “அல்லி ராணி (Queen Alli) என்ற அரசி தமிழ் சங்க காலத்தை சேர்ந்த ஒரு வலிமை மிக்க ராணி ஆவார். இவர் இலங்கையின் மேற்கு மற்றும் வடக்குக் கடற்கரை பகுதி முழுவதும் தன் தலைநகரான, குதிரைமலையில் இருந்து ஆட்சி செய்து வந்தார். ஆயினும், மரபாராய்ச்சியாளர்கள், அல்லி ராணியின் அரிப்புக் கோட்டை மன்னாரில் உள்ளது என கூறுகின்றனர்.

அல்லி ராணி இலங்கையின் மேற்கு மற்றும் வடக்கு கடற்கரை பகுதிகள் முழுவம் ஆட்சி செய்து வந்தார். மேலும் அங்கு முத்துக் குளித்தல் தொழிலை தன் வசம் வைத்திருந்தார். வடக்கு புற கடலாக இருப்பதால், உள்நாட்டு மரபுவழி தொடர்பு மூலம் சிலாபம் கால்வாய் மூலமாக, அரசாடை வளைகுடாவை இணைத்து தலைநகர் குதிரைமலை முதல் அக்கரைப்பற்று வரை தரைமார்க்கமாக முன்னேறினார். ஒரு பேர் ஊழி வெள்ளம் ஏற்பட்டு, அரசாடை பகுதியின் ஒரு சிறிய பிளவைத் தவிர பெரும் நிலப்பரப்பு கடலில் மூழ்கி மறைந்தது. தற்போது, இது புத்தளம் கடல் நீரேரி என அழைக்கப்படுகிறது. அரிப்புக் கோட்டையின் பல பகுதி அழிந்துபோயிற்று. (பார்க்க : https://ta.wikipedia.org)

முசலிப் பிரதேசம் பன்னாட்டளவில் பிரபல்யம் பெற்றமைக்கு மற்றொரு அம்சம் இப்பிரதேசத்தில் காணப்பட்ட யானைகளாகும். புராதன உலக நாகரிக பிரதேசங்களினால் யானை வர்த்தகத்திற்கும் யானைத் தந்தங்களுக்கும் பிரபல்யமான பிரதேசமாக முசலி காணப்பட்டதாக சில வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், இப்பகுதி வனங்களில் பெறப்பட்ட தேனிற்கும் மருத்துவ குணமும் மதிப்பும் இருந்துள்ளது.

முசலி பிரதேசத்தின் மூதாதையர்கள் முத்துக் குளித்தலோடு தொடர்பு கொண்டிருந்த அரேபிய வழித்தோன்றல்களும் கீழக்கரையில் வாழ்ந்திருந்த இந்திய வழித்தோன்றல்களும் என அறியமுடிகிறது. முத்துக்குளிப்புடன் தொடர்பு கொண்டிருந்த இப்பிரதேச மக்கள் பிற்காலத்தில் சங்கு குளித்தல், கடல் திரவியம் தேடுதல் ஆகிய பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். இத்தகைய கடல் பொருளாதார நடவடிக்கைகள் பருவகாலங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதனால், கடல் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத காலங்களில் இப்பிரதேச மக்கள் விவசாய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தார்கள். முசலி பிரதேசத்தில்

அமைந்திருந்த குளங்களும் கால்வாய்களும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சாதகமாக இருந்தன.

முசலியின் யானைகள் மிக சிறப்புத் தன்மைகளைக் கொண்டு இருந்ததால், அதற்கு அதிகமான கேள்விகள் இருந்தன. (Cannon and Davis - 1995) தென்னாசியாவில் யானைகளுக்குப் பிரபல்யமான இடங்களில் ஒன்றாக முசலி காணப்பட்டது. (Jeyawardena - 1994) யானை ஏற்றுமதி மூலமாக முசலி அதிக வருமானத்தையும் சர்வதேசப் புகழையும் பெற்றுக் கொண்டது. (Boake – 1988)

யானை பிடித்தலில் தேர்ச்சி பெற்ற முஸ்லிம்கள் பணிக்கர் என்று அழைக்கப்பட்டார்கள். கரடிக்குழி, மறிச்சிக்கட்டி, பாலக்குழிப் பிரதேச முஸ்லிம்கள் யானை பிடிப்பதில் திறமையானவர்களாக இருந்துள்ளனர். இப்பகுதி யானைகளுக்கு ஒரு தனியான இடம் காணப்பட்டது. அதனால், வீரமும் சாதுரியமும் மிக்கவர்கள் யானைகளைப் பிடித்துள்ளர். அதன் மூலம் பொருளாதார வளத்தைப் பெருக்கிக் கொண்டனர்.

இப்பிரதேசத்தின் மற்றொரு முக்கிய அம்சம், விவசாயப் பொருளாதார நடவடிக்கையாகும். இரண்டு பெரிய நீர்ப்பாசன திட்டங்களை உடையதாக முசலிப் பிரதேசம் விளங்குகிறது. அவை, கி.பி. நான்காம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. விவசாய பொருளாதார அடிப்படைகளையும் ஏனைய வளங்களையும் நிறைய கொண்டிருந்ததால், இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியாகவும் முக்கியமானதொரு பிரதேசமாக அது மதிக்கப்பட்டிருக்கிறது.

முசலி பிரதேசம் கடல் பயன்பாட்டுடன் தொடர்புடையது. 18 மைல்கள் நீளமான கடற்கரையைக் கொண்டதும், ஆழமான இந்து சமுத்திரத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளது. கரையோர மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடியுடன் களப்புப் பிரதேசத்தில் இறால், நண்டு என்பன பிடித்தல், சங்கு, அட்டை என்பன எடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முசலிப் பிரதேசத்தில் 18 சதவீதமான நிலப்பரப்பு மந்தை வளர்ப்புக்குப் பொருத்தமான புல் நிலம் சிறு காடுகளைக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் உள்ள மொத்த நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதிகள் காடுகளாகும். 60 வீதமான நிலம் அடர்ந்த காடுகளாகவும், மற்றயவை மென்காடுகளாகவும் உள்ளன. தேன் சேகரித்தல், விறகு சேகரித்தல், கனிகளும் விதைகளும் கிழங்குகளும் சேகரித்தல், வீடு கட்டுவதற்கும் தளபாடங்கள் செய்வதற்குமான பாலை, முதிரை, கருங்காலி, தம்மனை போன்ற மரங்களைப் பெறுதல் போன்ற நடவடிக்கைகளை இப்பிரதேச மக்கள் பகுதிநேர தொழிலாக மேற்கொண்டு வந்துள்ளார்கள்.

முசலியின் முக்கிய மற்றுமொரு சிறப்பு இப்பிரதேசத்தின் பல்லினத் தன்மையாகும். முஸ்லிம்களோடு தமிழர்களும் சிங்களவர்களும் இப்பிரதேசத்தில் வாழ்கின்றார்கள். ஆதிக் குடியேற்ற காலம் முதல் தமிழ் - முஸ்லிம் மக்கள் இப்பிரதேசத்தின் பங்காளிகளாக மிக நீண்ட காலம் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றார்கள்.

இப்பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களில் அதிகமானவர்கள் கிறிஸ்தவ சமயத்தை பின்பற்றுகின்றனர். அவர்கள், கடல்வள நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபாடு கொண்டுள்ளனர். அதேபோல், சிங்கள மக்கள் பருவகால மீனவர்களாக முசலிப் பிரதேச கரையோர மீன்பிடித் தொழிலோடு தொடர்புடையவர்களாக் இருந்து வந்திருக்கின்றார்கள். மிக அண்மைக் காலத்தில் அரசாங்கத்தினால் கொண்டச்சி – கஜூவத்தை மரமுந்திரிகைக் குடியேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட சிங்களக் குடியேற்றமொன்று தோற்றுவிக்கப்பட்டது. அதேபோல் வேறு சில குடியேற்றங்களும் நடைபெற்றுள்ளன. எனினும், இன்று மூவின மக்களின் வாழ்விடமாக முசலி காணப்படுகிறது.

இப்பிரதேசத்தின் மொத்த சனத் தொகையில் 70 சதவீதமானவர்கள் முஸ்லிம்களாவர். முசலிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களில் முஸ்லிம்களே மிகப் பெரும்பான்மையினராக இருந்தனர் என சைமன் காசிச் செட்டி (1834) குறிப்பிடுகின்றார்.

சமய ரீதியாக முஸ்லிம்கள் அவர்களின் தனித்துவத்தையும் கலாசார மரபுகளையும் பேணக்கூடிய செறிவு கொண்ட குடியிருப்புக் கட்டமைப்பைக் கொண்ட வாழ்வியல் முறைமையைக் கொண்டுள்ளனர். முஸ்லிம்கள் தமது சமயத்தைப் பின்பற்றி ஒழுகுவதோடு, அதைப் பாதுகாக்கும் அதே சந்தர்ப்பத்தில், இப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் சகோதர பிற இன மக்களோடு இன ஐக்கியத்தையும் சமத்துவத்தையும் பேணி வருகின்றனர்.

இங்கு வாழும் மக்களின் கட்டுக்கோப்பான சமூக அமைப்பும், இன ஐக்கியம் பேணும் தன்மையும் பரந்த கண்ணோட்டமும் பரோபகாரம் கொண்ட மனோபாவமும் குறிப்பிடத்தக்க சிறப்புப் பண்புகளாக இருக்கின்றன.

மத ரீதியான பாடசாலைகள் உள்ளன. எல்லா இன மாணவர்களும் அவர்கள் விரும்பிய பாடசாலையில் கற்கின்ற வாய்ப்புகள் உள்ளன. எந்தப் பாடசாலையிலும் ஆசிரியர்கள் கற்பிக்கின்ற தாராளப் போக்கும் இங்குள்ளது. ஒவ்வொரு மதத்தினருக்கும் அவரவர் வழிபாட்டுத் தளங்கள், கலாசார முறைமைகள் உள்ளன. அவற்றை மதித்து நடக்கின்ற மனப்பாங்குள்ளவர்களாக இங்குள்ள மக்கள் காணப்படுகின்றனர்.

பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் அரசியல் ரீதியாகவும் முசலி பிரதேச மட்டத்தில் இன முரண்பாடுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. முஸ்லிம் - தமிழ் உறவு மிகவும் போற்றத்தக்க வகையில் காணப்பட்டது. 1990களில் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் ஒரு வரலாற்றுக் கறையை ஏற்படுத்தியது. எனினும், மீள் குடியேற்றம் மிகவும் சுமுகமாக நடைபெற்றது.

முஸ்லிம்களும் தமிழ் மக்களும் தொழில் ரீதியாக, பொருளாதார கொடுக்கல் வாங்கல் அடிப்படையில் மிக நெருங்கிய தொடர்புகளை நீண்டகாலம் பேணி வருகிறார்கள். இப்பிரதேச தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை தீர்மானித்த காரணிகளில் முக்கியமானது இவ்விரு மக்களினதும் தனித்துவமான பொருளாதார நடவடிக்கைகளாகும் எனக் குறிப்பிட முடியும். இவ்வின ஐக்கியத்தை முசலி பிரதேசம் முழுவதும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. முஸ்லிம்களும் தமிழர்களும் பிரதேச மட்டத்தில் மாத்திரமல்லாமல் கிராம மட்டத்திலும் நெருங்கி உறவாடி வாழ்கின்றார்கள். அத்தோடு, முஸ்லிம் - தமிழ் மக்களின் பொருளாதார உறவுகள் அவர்களுக்கிடையில் பரஸ்பர பொருளாதார பண்டமாற்று அடிப்படையிலான உறவுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இரு சமூகத்தினதும் ஒரே மொழி மரபு அவர்களின் தொடர்புக்கும் உறவுக்கும் சகவாழ்வுக்கும் முக்கிய பாத்திரம் வகிக்கிறது. தமிழ் மொழி, முஸ்லிம் - தமிழ் இன உறவை மேம்படுத்தக் காரணமாக இருக்கிறது எனக் கருதலாம். முசலிப் பிரதேச தமிழ் - முஸ்லிம் மக்களின் பொது மொழியாக தமிழ் காணப்படுகிறது. தமிழ் மொழி இவ்விரு இன மக்களையும் இணைக்கிறது; ஒருவரை மற்றவர் புரிந்து கொள்ள உதவுகிறது; பாடசாலையில், உயர் கல்விக் கூடங்களில் ஒன்றாக கற்க வாய்ப்பளித்தது; இது ஒருவரோடொருவர் கலந்து பழகும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது; இத்தகைய மொழி அடிப்படையிலான முஸ்லிம் - தமிழ் மக்களுக்கு இடையிலான உறவு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

இப்பிரதேச மக்களின் திருமண சம்பிரதாயங்கள், உடை, உணவு பழக்க வழக்கங்கள் வழக்காறுகள், சமூகவியல் அம்சங்கள் போன்றவை வரலாற்று ரீதியாக எழக்கூடிய பிரச்சினைகள் பலவற்றுக்கு பதில் தர கூடியவையாக இருக்கின்றன. விவசாயம், மீன்பிடி, அக்கம் பக்கத்து கிராமம், வீடு என்ற உறவு ரீதியான உணர்வோடு, தினமும் உணவு பரிமாற்றம் செய்து வாழ்ந்தனர். சகோதர சமூகத்தோடு சோறு - கறிகளைப் பரிமாறிக் கொள்கின்ற ஒரு பண்பாடு இவர்களிடம் இன்றும் காணப்படுகிறது.

இதற்கான காரணம் இரு சமயம் சார்ந்தவர்களும் பேசுகின்ற மொழி ஒன்றாக இருக்கிறது என்பதே என்று கருதலாம். அவர்கள் மேற்கொள்கின்ற விவசாயம், மீன்பிடி, கூலிவேலை போன்ற அனைத்து விதமான தொழில் முறைமையும், நீண்ட காலமாக கிராமங்களுக்கிடையே பாகுபாடற்ற ஓர் உறவு முறையை வெளிக்கொண்டு வந்திருக்கிறது. விசேட தினங்களிலும் பெருநாட்கள் போன்ற முக்கிய தினங்களிலும் பரஸ்பரம் வாழ்துத் தெரிவித்து, கலந்து மகிழ்ந்து வாழ்கின்றனர்.

கிராமப்புற கவிஞர்கள் இங்கு காணப்பட்டிருக்கிறார்கள்; நாட்டுப்புறப் பாடல்கள் இவர்களால் பாடப்பட்டுள்ளன. அதேபோன்று கோலாட்டம், களிகம்பு இங்கே பிரதானமானதாக இருந்திருக்கிறது. முஸ்லிம் புலவர்கள் பாடிய நாட்டுப்பாடல்கள் சிலவற்றின் இராகங்கள் தமிழ் மரபு சார்ந்து இருந்துள்ளது. பூர்வீகமாக இங்கு வாழ்ந்து வரும் இப்பிரதேச மக்களிடம் கலாசாரப் புரிந்துணர்வு இருந்துள்ளது. ஒற்றுமை நிலைத்துள்ளது. பெரிய முரண்பாடுகள் வந்ததற்கான சான்றுகள் இல்லை. சில சில்லறை சண்டைகள் நிகழ்ந்திருக்கலாம். 1990களில் வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். அதன் பின்னர் மீளவும் குடியேறினார்கள்.

மீள்குடியேற்றம் நிகழ்கின்ற பொழுது, அந்த பழைய உறவுகள் பெருமளவு தாக்கம் செலுத்தியது. ஒரு சுமுகமான நிலையிலேயே இந்த மீள்குடியேற்றம் 90 வீதமான அளவு சமத்துவப் புரிந்துணர்வோடுதான் நடைபெற்றிருக்கின்றது.

பொதுவாக, பலவந்தமாக தாய் மண்ணிலிருந்து வெளியெற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றத்தின் போது, அவர்களை தமிழ் மக்கள் வரவேற்ற பாங்கு வரவேற்கத் தக்கதாக இருந்தது.

பல சமய நிகழ்வுகளில் இரண்டு மதத்தை சார்ந்தவர்களும் பங்கேற்கிறார்கள். இதன் மூலம் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டிருக்கின்றது என்பதை அறிய முடிகிறது. மொழி ரீதியான உறவும் தொழில், கலை, கலாசார, இலக்கிய ரீதியான தொடர்புகளும் புரிந்துணர்வும் தொடச்சியாக இருந்து வருகிறது. மீள்குடியேற்றத்தின் போது சுமுக நிலை நிலவியதற்குக் காரணமாக பழைய புரிந்துணர்வும் மொழி ரீதியான உறவும் இருந்திருக்கிறது என்று கருதப்படுகிறது.

ஒரே மொழி பேசுகின்ற மனிதர்களாகிய நாம், எமக்கிடையே எழும் வேறுபாடுகளை ஏற்று, அங்கீகரித்து, கூட்டிருப்பாய் வாழ்ந்து, ஒன்றித்துச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை அறிந்து, மேம்பாட்டுக்கான எமது வகிபாகத்தை உணர்ந்து, வழங்கிடுவோம்.

ஒரு பிரதேசத்தின் நிலையான வளர்ச்சி என்பது, அப்பகுதியில் வாழும் தனிமனிதர்கள் மற்றும் சமூகங்களுக்கு இடையே மன்னிப்பு, இரக்கம், சகிப்புத் தன்மை, புரிந்துணர்வு என்பவற்றின் அடிப்படையிலான சமாதானமும் சகவாழ்வியல் முறையும் நிலைக்கையிலேயே உறுதிப்படுத்தப்படுகின்றது.

**உசாத்துணைகள்**


1) எம்.எஸ்.எம்.அனஸ் (2009) புத்தளம் முஸ்லிம்கள் வரலாறும் வாழ்வியலும்

   குமரன் புத்தகம் - கொழும்பு – சென்னை.

2) கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லா (1997) இலங்கையின் இனப் பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்

   தொகுதி - 5 முசலி முஸ்லிம்கள்

   வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு – கொழும்பு.

3) மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் - வரலாறும் பண்பாடும் (2005)

   முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கொழும்பு -10.

4) "https://ta.**wikipedia**.org.